1981 சனவரி 29]

திருவாரூரில் மேம்பாலம்.

*வினா எண் 92—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மேம்பாலத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இத்திட்ட வேலை எப்பொழுது முடிவுறும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ரூ 55 இலட்சம். (ஆ) இன்னும் 9 மாதங்களில் முடிவடையும்,

திரு. எம் எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, இந்த மேம்பாலம் கட்டுவதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன?

(பதில் இல்லை)

ஒன்றிய ஜீப்பு வண்டிகளுக்குப் பெட்ரோல் வழங்கல்.

*வினா எண் 93—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்பு வண்டிகளுக்கு தற்போது அனுமதிக்கப்படும் மாதம் 100 லிட்டர் பெட்ரோல் அளவினை அதிகரிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தவேலு: கேள்வியில் குறிப்பிட்டுள்ளது போல் தற்போது ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பெட்ரோல் அளவு 100 லிட்டர் அல்ல. 250 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 250 லிட்டர் பெட்ரோல் என்றும், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் பெட்ரோல் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலைக்கு உணவுத் திட்டம் நடைபெறக்கூடிய கிராமங்களில் பெட்ரோல் போடுவதற்கு இயலாத காரணத்தால் அதிகாரிகள் ஒப்பந்தக்காரர்களிடம் பெட்ரோல் போடுமாறு ஆணையிடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெட்ரோல் பெறப்படுவது என்பது இந்த அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் அதனைத் தனியாகக் கொடுத்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் இவ்வாறு ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 250 லிட்டர் என்றும் 300 லிட்டர் என்றும் பெட்ரோலின் அளவு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 50 லிட்டர் பெட்ரோல் ஒரு நாளைக்கு கொடுக்கவேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்களில் ஜீப்புகளே இல்லாமல் இருப்பதுஅரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? குமரி மாவட்டத்தில் தோவாளை ஒன்றியத்தில் உள்ள ஜீப் பழுதுபட்டு அது இன்னும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓடுகின்ற ஜீப்புக்கு கொடுக்கப்படும் பெட்ரோலை அதிகப்படுத்துவது பற்றிய கேள்வி. ஆகவே ஓடாத ஜீப் பற்றியெல்லாம் கேட்க முடியாது.

திரு. சி. சிவப்பிரகாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே ஓடுகின்ற ஜீப்புகளுக்கும் அதே அளவு பெட்ரோல்தான் வழங்கப்படுகிறது. மேடு பள்ளமாக வளைந்து வளைந்து செல்லக்கூடிய பாதையில் ஏராளமான இடங்களைப் போய் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் அதை அதிகப்படுத்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியில் ஓடக்கூடிய ஜீப்புகளுக்கு என்று தனியாக வசதிகள் செய்யப் பெறுவதில்லை. ஆனால் அங்கே இருக்கிற நிதி நிலைமைகளுக்கு ஏற்ப அவர்கள் தாங்களாகவே செய்துகொள்வார்கள்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு 50 லிட்டர் பெட்ரோலுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் இல்லாததால், ஒன்றியங்களை அதிகமாக சுற்றிப் பார்க்க வேண்டிய அவசியம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அதனால் இரண்டு நாட்களுக்கு சுற்றிப் பார்ப்பதற்குப் போடக்கூடிய பெட்ரோலை விட நான்கு நாட்கள் சுற்றிப் பார்க்கும் அளவிற்கு பெட்ரோல் வழங்க அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1981 சனவரி 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளை பட்ஜெட் வருகின்ற நேரத்தில் பேசினால் நலமாக இருக்கும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஒன்றியங்களில் இரண்டு மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அப்படி ஒரு ஒன்றியத்தில் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதனால் 50 லிட்டர் பெட்ரோல் வழங்குவது எங்களுக்கு போதவில்லை. இதுபோன்ற பகுதிகளிலாவது அதை அதிகரிப்பதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி ஒரு ஒன்றியத்திற்கு 3 சட்டமன்ற உறுப்பினர்கள் வர முடியாது. வேண்டுமானால் ஒரு ஒன்றியத்தில் பாதி பாதியாக இரண்டு உறுப்பினர்கள் தோந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் கூட இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தான் அந்த ஒன்றியத்தில் வேலை இருக்கக்கூடும். அப்படியே இருந்தாலும்கூட ஒரு நாளைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு, மறுநாளைக்கு வேறு ஒருவருக்கு என்கின்ற முறையில் வேலைகளை வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேமாதிரி நகர்ப்புறத்திலே இருந்து வரக்கூடிய உறுப்பினர்களுக்கும், நகராட்சி மன்ற ஜீப்களை வழங்கி அதுமாதிரி பெட்ரோல் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியம் பற்றிய கேள்வி.

மருந்து ஆய்வாளர் பதவிகள்.

*வினா எண் 94—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்து ஆய்வாளர் பதவிகள் அதிகரிக்கும் ஆலோசனை அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பதவிகள் அதிகரிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது,